## 1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

முன்னிலை : **திருமதி.R.L.பிரியதர்ஷினி, B.A., B.L..,**

2வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)

திருநெல்வேலி

2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ம் நாள் திங்கள்கிழமை

**<u>இ.ம.எண்.4/2025 அதன் அ.வ.எண்.317/2023</u>**

தமிமுல் அன்சாரி ... மனுதாரர்/ 2ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்கப்பட வேண்டிய நபர்.

–எதிர்–

1. H. ஹிமீதா பீவி ... 1ம் எதிர்மனுதாரர் / வாதி
2. S. பீர்மைதீன் ... 2ம் எதிர்மனுதாரர்/ 1ம் பிரதிவாதி

இம்மனு என்முன்பாக 08.12.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.முகம்மது உசேன் அவர்கள் வாதுரை செய்யாத நிலையிலும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.கிருஷ்ணகுமார் அவர்கள் அவர்கள் வாதுரை செய்யாத நிலையிலும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.நாகராஜன் அவர்கள் போதிய கால அவகாசம் அளித்தும் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், மனு, எதிருரை மற்றும் ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது, அசல் வழக்கில் மனுதாரரை தரப்பினரக சேர்க்க அனுமதி அளித்து உத்தரவிடக் கோரி, மனுதாரரால் கட்டளை 1 விதி 10(2) ன் பிரகாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–</u>**

2.1) அசல் வழக்கானது, 1ம் எதிர்மனுதாரரால், 2ம் எதிர்மனுதாரருக்கு

எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் தபசிலாக காட்டியுள்ள விவரங்கள் தவறானது ஆகும். தபசில் சொத்திற்கும் 2ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கும் எந்த உரிமையும் கிடையாது. 1ம் எதிர்மனுதாரர் தபசிலாக காட்டியிருக்கிற தபசில் விவரத்தில் 3 கடை கட்டிடங்களும் என்று கூறியிருப்பது பற்றி மனுதாரருக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. அதனைத் தொடர்ந்து கீழ்பக்கம் கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ள காலிமனையும் அதற்குரிய சகல மாமூல் பாத்தியமும் என்று கூறியிருப்பது 1ம் எதிர்மனுதாரருக்கு முற்றிலும் உரிமையும், அனுபவமும் இல்லாத சொத்தை பொறுத்து வாதி தபசிலாக காண்பித்து நீதிமன்றத்தை ஏமாற்றி பொய்யாக தீர்ப்பை பெறும் வகையில் பிராதினை தாக்கல் செய்துள்ளார்.

2.2) 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட கடை கட்டிடமாக கூறும் நிலம் V.S.T. தம்தாஸ் நகர், ஹாமீம்பள்ளி மதரஸா வக்பு அலல் அவுலாத் கமிட்டிக்குரிய இடமாகும். மேற்படி இடத்தை மேற்படி கமிட்டியின் மூலம் தரைவாடகைக்கு எடுத்து, அதில் 1ம் எதிர்மனுதாரர் கடை கட்டிடம் அனுபவம் செய்து வருவதாக கூறியுள்ளார். மேற்படி கடை கட்டிடத்திற்கு தெற்கு பகுதியில் உள்ள ஹாமீம்புரம் 5 வது தெருவில், மனுதாரரின் வீடு முதன்மையாக அமைந்துள்ளது. மனுதாரரின் வீட்டின் மேற்கு பக்கம் மாடிபடிக்கட்டுகள் அமைந்துள்ளது. படிகட்டின் மேல்பக்கம் மனுதாரர் கிழக்கிலிருந்து மேற்காகவும், வடக்கிலிருந்து தெற்காகவும், ப வடிவில் கம்பி வேலி அமைத்து அனுபவம் செய்து வருகிறார். ஆனால், 1ம் எதிர்மனுதாரர் மேற்படி கம்பி வேலியை அவர் அமைத்து அனுபவம் செய்து வருவதாகவும், அதை பிரதிவாதி தடுப்பதாகவும் கூறி, நீதிமன்றத்தை ஏமாற்றி பொய்யாக தீர்ப்பை பெறும் வகையில் அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கின் தன்மை குறித்தும், அசல் வழக்கு வக்பு அலல் கமிட்டிக்கு பாத்தியப்பட்ட வக்பு சொத்து என்பதை நிரூபிப்பதற்காகவும் மனுதாரரை அசல் வழக்கில் கட்சியாக சேர்க்க வேண்டியது அவசியம் ஆகும்.

எனவே, அசல் வழக்கில் மனுதாரரை தரப்பினரக சேர்க்க அனுமதி அளித்து உத்தரவிடக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. பிராது தபசில் சொத்து மேலப்பாளைம் V.S.T.ஹாமீம்பள்ளி மதரஸா என்ற தனியார் வக்புக்கு பாத்தியப்பட்டது என்பது உண்மை. பிராது தபசில் சொத்தை 1ம் எதிர்மனுதாரரின் கணவர் 30.03.2012ல் மேற்படி மதரஸாவின் அப்போதைய டேர்ன் ஹக்தாரிடமிருந்து, யாதாஸ்து மூலம் தரை வாடகைக்கு எடுத்து, கட்டிடம் கட்டி அடுத்துள்ள காலி மனையில் கம்பி வேலி அமைத்து அனுபவித்து வந்து, கடந்த 03.04.2017ல் மேற்படி யாதாஸ்தை 1ம் எதிர்மனுதாரர் அவரது பெயருக்கு மாற்றி அனுபவம் செய்து வருகிறார். மேற்படி காலிமனை எக்காலத்திலும் மனுதாரருக்கு பாத்தியப்பட்டது கிடையாது. மனுதாரர் தனது அபிடவிட்டில் கதவு எண்.111, காயிதேமில்லத் தெருவில் குடியிருப்பதாக கூறியுள்ளார். ஆனால் அபிடவிட்டில் ஹாமீம்புரம் 5வது தெருவில் முதல் வீட்டில் குடியிருப்பதாக கூறியுள்ளார். அசல் வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், இடையூறு செய்கின்ற 2ம் எதிர்மனுதாரர் மட்டுமே அவசியமான கட்சி ஆவார். மனுதாரர் அசல் வழக்கு நிலுவையில் உள்ளதை எவ்வாறு தெரிந்துக் கொண்டார் என்பதை பொறுத்து அபிடவிட்டில் எதுவும் கூறவில்லை. இம்மனுவானது டிசம்பர் 2024ல் தயார் செய்யப்பட்டு, சுமார் 10 மாதங்கள் கழித்து 06.10.2025ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி காலதாமதத்திற்கு எந்த காரணமும் மனுதாரர் தரப்பில் கூறப்படவில்லை. 2ம் எதிர்மனுதாரரின் தூண்டுதலின் பேரில் அசல் வழக்கினை இழுத்தடிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எனவே, இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4) **<u>இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர் கோரிய பரிகாரம் வழங்கி உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

5) இந்த மனுவை பொறுத்தவரை இருதரப்பிலும், வாய்மொழி சாட்சியம் எதுவும் இல்லை. சான்று ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) மனு, எதிருரை மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**<u>தீர்வு</u>:–**

7) அசல் வழக்கானது. பிராது தபசில் சொத்தில் கிழமேலாக கட்டப்பட்டுள்ள கடை கட்டிடங்களை தொடர்ந்து, அதன் கீழ்பக்கமுள்ள காலிமனையினை கம்பி வேலி அமைத்து, வாதி தரை வாடகைதாரர் என்ற நிலையில், தனித்து அனுபவம் செய்து வருவதை, பிரதிவாதியோ, அவரது முகவர்களோ, வேலையாட்களோ, அவரைத் தொடர்ந்து உரிமை கொண்டாடும் நபரக்ளோ எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என 1ம் எதிர்மனுதாரரால், 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மனுதாரர் தரப்பில், 1ம் எதிர்மனுதாரர் தபசிலாக காட்டியிருக்கிற தபசில் விவரத்தில் 3 கடை கட்டிடங்களை தொடர்ந்து கீழ்பக்கம் கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ள காலிமனையும் அதற்குரிய சகல மாமூல் பாத்தியமும் என்று கூறியிருப்பது 1ம் எதிர்மனுதாரருக்கு முற்றிலும் உரிமையும், அனுபவமும் இல்லாத சொத்தை பொறுத்து வாதி தபசிலாக காண்பித்து நீதிமன்றத்தை ஏமாற்றி பொய்யாக தீர்ப்பை பெறும் வகையில் பிராதினை தாக்கல் செய்துள்ளதாகவும், 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட கடை கட்டிடமாக கூறும் நிலம் V.S.T. தம்தாஸ் நகர், ஹாமீம்பள்ளி மதரஸா வக்பு அலல் அவுலாத் கமிட்டிக்குரிய இடம் என்றும், மேற்படி கடை கட்டிடத்திற்கு தெற்கு பகுதியில் உள்ள ஹாமீம்புரம் 5வது தெருவில், மனுதாரரின் வீடு முதன்மையாக

அமைந்துள்ளது என்றும், மனுதாரரின் வீட்டின் மேல்பக்கம் மனுதாரர் கிழக்கிலிருந்து மேற்காகவும், வடக்கிலிருந்து தெற்காகவும், ட வடிவில் கம்பி வேலி அமைத்து அனுபவம் செய்து வருவதாகவும், ஆனால், 1ம் எதிர்மனுதாரர் மேற்படி கம்பி வேலியை அவர் அமைத்து அனுபவம் செய்து வருவதாகவும், அதை பிரதிவாதி தடுப்பதாகவும் கூறி, நீதிமன்றத்தை ஏமாற்றி பொய்யாக தீர்ப்பை பெறும் வகையில் அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கின் தன்மை குறித்தும், அசல் வழக்கு வக்பு அலல் கமிட்டிக்கு பாத்தியப்பட்ட வக்பு சொத்து என்பதை நிரூபிப்பதற்காகவும் மனுதாரரை அசல் வழக்கில் கட்சியாக சேர்க்க வேண்டியது அவசியம் என்று கட்சி செய்யப்பட்டுள்ளது.

9) 1ம் எதிர்மனுதாரர் தரப்பிலும் பிராது தபசில் சொத்து அமைந்துள்ள நிலம், V.S.T.ஹாமீம்பள்ளி மதரஸா என்ற தனியார் வக்புக்கு பாத்தியப்பட்டது என்பது ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. பிராது தபசில் சொத்தை 1ம் எதிர்மனுதாரரின் கணவர் 30.03.2012ல் மேற்படி மதரஸாவின் அப்போதைய டேர்ன் ஹக்தாரிடமிருந்து, யாதாஸ்து மூலம் தரை வாடகைக்கு எடுத்து, கட்டிடம் கட்டி அடுத்துள்ள காலி மனையில் கம்பி வேலி அமைத்து அனுபவித்து வந்து, கடந்த 03.04.2017ல் மேற்படி யாதாஸ்தை 1ம் எதிர்மனுதாரர் அவரது பெயருக்கு மாற்றி அனுபவம் செய்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும், மேற்படி காலிமனை 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது கிடையாது என்றும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பிலேயே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அசல் வழக்கின் பிராதிலும் 1ம் எதிர்மனுதாரர் தபசில் சொத்து அவருக்கு பாத்தியப்பட்டது என்று கட்சி செய்யப்பட்டவில்லை. மாறாக தபசில் சொத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாடகைதாரராக இருந்து வருவதாகவும், அதில் 1ம் எதிர்மனுதாரரின் அனுபவத்தை 2ம் எதிர்மனுதாரர் இடையூறு செய்ததாக மட்டுமே கட்சி செய்யப்பட்டுள்ளது.

10) அசல் வழக்கானது 1ம் எதிர்மனுதாரரால், 07.08.2023ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் இம்மனுவினை அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் கழித்து 06.10.2025ம் தேதியில் தாக்கல் செய்துள்ளார். மனுதாரருக்கு அசல் வழக்கு குறித்து எவ்வாறு, எப்போது தெரிய வந்தது என்பது குறித்தும், ஏன் இரண்டு ஆண்டுகள் தாமதமாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டது என்பது குறித்தோ மனுதாரர் மனுவுடன் இணைந்த அபிடவிட்டில் எந்தவித விளக்கமும் அளிக்கவில்லை. கம்பிவேலி அமைக்கப்பட்ட இடத்தில் மனுதாரருக்கு உரிமையோ, அனுபவமோ இருப்பதாக நிரூபிக்கும் வகையில் மனுதாரர் எந்தவித ஆவணங்கைளும் தாக்கல் செய்யவில்லை. பிராது தபசில் சொத்தின் 4 பக்க எல்கை எதிலும் மனுதாரரின் சொத்து இருப்பதாக கூறப்படவில்லை. எனவே, மனுதாரர் அவருக்கு கம்பி வேலி போடப்பட்ட இடத்தில் உரிமையும், அனுபவமும் இருப்பதாக முதல் நோக்காக நிரூபிக்கா நிலையில் மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினராக கட்சி சேர்க்க வேண்டுமென்று கோருவது ஏற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11) மேலும், மனுதாரர் தரப்பில், அசல் வழக்கின் தன்மை குறித்தும், அசல் வழக்கு வக்பு அலல் கமிட்டிக்கு பாத்தியப்பட்ட வக்பு சொத்து என்பதை நிரூபிப்பதற்காகவும், இந்நீதிமன்றத்தில் பிராது தபசில் சொத்தை பொறுத்து எந்தவித வழக்கும் தாக்கல் செய்ய முடியாது என்பதை நிரூபிப்பதற்காகவும், மனுதாரரை அசல் வழக்கில் கட்சியாக சேர்க்க வேண்டுமென கூறப்பட்டுள்ளது. ஆனால், 1ம் எதிர்மனுதாரர் தரப்பிலேயே பிராது தபசில் சொத்து வக்புக்கு பாத்தியப்பட்டது என ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அசல் வழக்கில் பிராது தபசில் சொத்தை பொறுத்து எந்தவித விளம்புகை பரிகாரமும் கோரப்படவில்லை. மேலும், அசல் வழக்கானது 1ம் எதிர்மனுதாரர் / வாதி, 2ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட

ஒன்றாகும். இவ்வழக்கில் தன் அனுபவத்திற்கு யார் இடையூறு செய்தார்களோ, அவர்களை மட்டுமே பிரதிவாதியாக சேர்க்கும் உரிமை வாதிக்கு உள்ளது. அதேபோல், யாருக்கு எதிராக வழக்கு தொடரும் உரிமை ஏற்பட்டுள்ளது மற்றும் யாருக்கு எதிராக வழக்கில் பரிகாரம் தேட வேண்டும் என்பதை நிர்ணயம் செய்ய வேண்டியவர் வாதியாவார். ஒருவேளை 1ம் எதிர்மனுதாரர் / வாதியானவர் மனுதாரரின் சொத்தை ஆக்கிரமித்து வைத்திருந்தால் அதுகுறித்து மனுதாரர் தனி வழக்கு ஒன்று தொடுத்து அதில் பரிகாரம் தேடிக் கொள்ள வேண்டுமே தவிர, 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மட்டும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கில் மனுதாரரையும் பிரதிவாதியாக கட்சி சேர்க்க வேண்டுமென கோருவது ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. எனவே, வழக்கு சந்தர்ப்ப சூழ்நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது, மனுதாரரை கட்சியாக சேர்க்காமலேயே அசல் வழக்கில் சரியான தீர்வு காண இயலும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Uploaded on 15.12.2025
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2025.12.15 18:14:15 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ)
திருநெல்வேலி

<u>மனுதாரர் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்</u>- இல்லை
<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்</u>- இல்லை

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Uploaded on 15.12.2025
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2025.12.15 18:14:21 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ)
திருநெல்வேலி

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**இ.ம.எண்.4/2025 அதன்**

**அ.வ.எண்.317/2023**

சீரான/ வரைவு – உத்தரவு
15.12.2025